இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 320 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 15 – வெள்ளிக்கிழமை 30 ஜூன் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 320 : Thiruvalluvar Year - 2054 - Aani 15 - Friday 30 June 2023 - madurai 12 Pages ₹ 5.00

## வரலாறு தெரியாமல் பேசுகிறார் பிரதமர்!

# தமிழ்நாடே கலைஞரின் குடும்பம்தான்!

## மணவிழாவில் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்!

**சென்னை, ஜூன் 30-**

**“வரலாறு தெரியாமல் பேசுகிறார் பிரதமர். தமிழ்நாடே கலைஞரின் குடும்பம் தான்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் கும்முடிப் பூண்டி கி.வேணு இல்ல மணவிழாவை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றும்போது குறிப்பிட்டார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்ற கழக உயர்நிலைச் செயல்திட்டக் குழு உறுப்பினர் கும்மிடிப்பூண்டி கி.வேணு இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு கழகத்தலைவரும்தமிழ்நாடுமுதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

நம்முடைய வேணு அவர்களைப் பற்றி சகோதரர் ராஜா அவர்களும், நம்முடைய நண்பர் டி.ஆர்.பாலு அவர்களும் நேரம் இல்லா காரணத்தால், ஆனால் சொல்ல வேண்டியதைச் சுருக்கமாக உங்களிடத்தில் சொல்லி இருக்கிறார்கள். நானும் அதைத்தான் வழிமொழிகிற நிலையில் நின்று கொண்டிருக்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டத்தின் ஒரு தீரராக, கழகத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, இளம் வயதிலிருந்து - மூத்த வயதிற்கு வந்திருக்கிறார் என்று சொல்ல மாட்டேன், உடல்நலத்தின் காரணமாக அவர் கொஞ்சம் தளர்ந்து போயிருக்கலாமே தவிர, இப்போதும் அவர் உட்கார்ந்திருக்கும் காட்சியைப் பார்த்தால் மாப்பிள்ளை போன்றுதான் அவர் உட்கார்ந்திருக்கிறார்.

### திருமண நாளை நாங்கள் சிறையில் கொண்டாடிய வரலாறு!

1975 ஆகஸ்ட் 22-ஆம் தேதிதான் நம்முடைய வேணு அவர்களுக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் திருமணம் நடந்தது. எனக்கு ஆகஸ்ட் 20. அதற்கு இரண்டு நாளுக்கு முன்பு எனக்கு. எனவே திருமணத்தைப் பொறுத்தவரை நான் அவரைவிட இப்போது சீனியர். இரண்டு நாள் சீனியர்.

ஓராண்டுகாலம் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சென்னை சிறைச்சாலையில் அடைபட்டிருந்தபோது, அங்கே திருமண நாளை நானும் கொண்டாடினேன், அவரும் கொண்டாடினார். இது எல்லாம் வரலாறு.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று, சென்னை அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் கும்முடிப்பூண்டி கி.வேணு இல்லத் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இதில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., அமைச்சர் ஆர்.காந்தி, மாவட்டச் செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர், டி.ஜெ.கோவிந்தராஜன், திருத்தணி எஸ்.சந்திரன் உள்ளிட்ட முன்னணியினர் பங்கேற்றனர்.

இந்த வரலாறு எல்லாம் பலருக்கு இன்னும் புரியவில்லை. அதுவும் நாட்டின் பிரதமராக இருக்கும் மோடி அவர்களுக்கே தெரியவில்லை என்றால் எங்கே போய் சொல்வது. ஏனென்றால் இது நம்முடைய குடும்பத்தில் நடைபெறும் நிகழ்ச்சி. இது வேணு அவர்களுடைய குடும்பம் மட்டுமல்ல. கழகக் குடும்பம்.

அண்ணாவால் - கலைஞரால் கட்டிக் காக்கப்பட்டிருக்கும் கழகக் குடும்பம் - இந்தக் குடும்பம். எனவே அந்தக் குடும்பத்தில் - ஒரு கொள்கைக் குடும்பத்தில் - அந்தக் கொள்கைக் குடும்பத்தின் இன்றைக்குத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் இந்த அடியேன் தலைமையில் இந்தத் திருமண விழா இன்றைக்கு நடந்தேறியிருக்கிறது.

முதன்முதலாக நம்முடைய வேணு அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தின் குருதனம்பேடு கிராமத்தில் கிளைக் கழகத்தின் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்டு பணியாற்றி இருக்கிறார். அதைத்தொடர்ந்து கும்மிடிப்பூண்டி ஒன்றியக் கழகத்தின் செயலாளராகப் பொறுப்பேற்று, கழகத்திற்காகப் பல்வேறு வகைகளில் தனது கடமையை நிறைவேற்றித் தந்திருக்கிறார். அதற்குப் பின்னால் தலைமைச் செயற்குழு உறுப்பினராக, திருவள்ளூர் மாவட்டம் என்று ஒரு மாவட்டம் உதயமானதற்குப் பின்பு, அந்தத் திருவள்ளூர் மாவட்டத்தின் செயலாளராகப் பொறுப்பேற்று, அதைத்தொடர்ந்து பல்வேறு பொறுப்புகளில் இருந்து தன்னுடைய கடமையை நிறைவேற்றித் தந்திருக்கிறார்.

> **தமிழ்நாட்டில் ஒன்று சேர்ந்து, நம்முடைய ஆட்சியை உருவாக்குவதற்கு காரணமாக இருந்தீர்களோ, அதேபோல் ஒன்றியத்தில் ஒரு சிறப்பான ஆட்சி - மதச்சார்பற்ற ஒரு ஆட்சி - நமக்காகப் பாடுபடும் ஒரு ஆட்சி - மாநில உரிமைகளை அந்தந்த மாநிலங்களுக்கு வழங்கும் நிலையில் நடைபெறும் ஆட்சி உருவாகுவதற்கு நீங்கள் எல்லாம் தயாராக வேண்டும்... தயாராக வேண்டும்.**

### தலைவர் சொல்லை தட்டாத தூய தொண்டர் வேணு!

இப்போது உயர்நிலை செயல்திட்டக் குழுவின் உறுப்பினர். பாலு அவர்கள் பேசுகிறபோது சொன்னார். தலைவர் என்ன சொன்னாலும் கேட்பார். தலைவர் கட்டளையை அப்படியே ஏற்றுக் கொள்வார். முதலில் பிடிவாதம் பிடிப்பார். எவ்வளவுக்கு எவ்வளவு கேட்க வேண்டுமோ, எவ்வளவுக்கு எவ்வளவு பிடிவாதம் பிடிக்க வேண்டுமோ அந்தளவுவிற்குப் பிடிவாதம் பிடிக்கக் கூடியவர் அவர். ஆனால் கடைசியாக தலைவர் என்ன சொல்லுகிறாரோ அதைத் தட்டாமல் கேட்கிற ஒரு தூய தொண்டனாக விளங்கிக் கொண்டிருப்பவர்தான் நம்முடைய வேணு அவர்கள்.

பாலு அத்தோடு நிறுத்தி இருக்கலாம். சும்மா இரு என்றாலும் இருந்திடுவார். ஆனால் அவரால் சும்மா இருக்க முடியாது. ஏதாவது செய்து கொண்டேதான் இருப்பார். இந்த உடல் நிலையிலும்கூட அவர் தொடர்ந்து அறிவாலயத்திற்கு வந்து, கழக நிகழ்ச்சிகளுக்கு சென்று கலந்து கொள்கிற நேரத்தில், நானே சில நேரங்களில் கொஞ்சம் கோபமாக “உடல்நலத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். ஏன் இப்படி அலைகிறீர்கள்?” என நான் உரிமையோடு கடிந்து கொண்டதும் உண்டு.

எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால் தன்னுடைய உடலைப் பற்றிகூட கவலைப்படாமல் உடல்நலத்தைப் பற்றிகூட சிந்தித்து பார்க்காமல் தொடர்ந்து கழகத்திற்காக ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் ஒரு உன்னதத் தொண்டர்தான் நம்முடைய கும்மிடிப்பூண்டி வேணு அவர்கள்.

அவருடைய இல்லத்தில் நடைபெறும் இந்த மணவிழா நிகழ்ச்சியில் உங்களோடு சேர்ந்து நானும் வாழ்த்துகிற வாய்ப்பைப் பெற்றமைக்கு, அதுவும் குறிப்பாக இந்த விழாவிற்குத் தலைமையேற்று வாழ்த்தும் வாய்ப்பையும் பெற்றமைக்காக நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

### கழக முப்பெரும் விழாவில் கலைஞர் விருது பெற்ற வேணு!

ஒவ்வொரு ஆண்டும் நம்முடைய கழகத்தின் முப்பெரும் விழாவை நடத்துகிறபோது, கழகத்திற்காக உழைத்த - உழைத்துக் கொண்டிருக்கும், பல்வேறு தியாகங்களை செய்திருக்கும் கழக நிர்வாகிகளை - முன்னோடிகளை எல்லாம் சிறப்பிக்கும் வகையில் அவர்களுக்குத் தந்தை பெரியார் பெயரிலே - அண்ணா பெயரிலே - நம்முடைய தலைவர் கலைஞர் பெயரிலே - நம்முடைய பொதுச் செயலாளராக இருந்த பேராசிரியர் பெயரிலே - புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பெயரிலே தொடர்ந்து விருதுகளை எல்லாம் நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் கடந்த 2021-ஆம் ஆண்டு முப்பெரும் விழா நடைபெற்றபோது, நம்முடைய வேணு அவர்களுக்குக் கலைஞர் விருது வழங்கி சிறப்பித்திருக்கிறோம் என்பதும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

1989-இல் முதன்முதலாகச் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று, அதற்குப் பின்னால் 1996-ஆம் ஆண்டு அதே கும்மிடிப்பூண்டி தொகுதியில் நின்று, வென்று சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றி, அந்தத் தொகுதி மக்களுக்காக அவர் ஆற்றியிருக்கும் பணிகள், அந்தத் தொகுதி மக்களுக்காகச் சட்டமன்றத்தில் குரல் கொடுத்த அந்த உணர்வுகள் அதை எல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தியிருக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவராக விளங்கியவர் நம்முடைய வேணு அவர்கள்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

100 ரூபாய்க்கு மேல் விற்கப்பட்ட தக்காளி விலை ரூ.50 ஆக குறைந்தது

## அரசின் நடவடிக்கையால் கட்டுக்குள் வந்தது தக்காளி விலை!

*சென்னை, ஜூன் 30-*

*தமிழ்நாடு அரசின் தொடர் நடவடிக்கைகளால், தக்காளி விலை கட்டுக்குள் வந்துள்ளது.*

*வரத்து குறைவு காரணமாக தக்காளி விலை கிடுகிடுவென 100 ரூபாயை தாண்டியது. இதனால், விலையை கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை, மேற்கொண்டது. தக்காளி விலை உயர்வால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் குறைந்த விலைக்கு தக்காளி விற்கப்பட்டு வருகிறது.*

*அரசின் இதுபோன்ற ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளால், தக்காளி விலை தற்போது கட்டுக்குள் வந்துள்ளது.*

*100 ரூபாய்க்கு மேல் விற்கப்பட்ட தக்காளி விலை, தற்போது மொத்த விலையில் 50 ரூபாய்க்கும் சில்லறை விலையில் 60 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.*

*நாட்டுத்தக்காளி 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.*

---

மணிப்பூர் சென்ற ராகுல்காந்தியை தடுத்து நிறுத்தியது காவல்துறை!

## சூரசந்த்பூர் செல்லும் வழியில் ராகுல் காந்தி தடுத்து நிறுத்தம்!

### மாநில பா.ஜ.க. அரசின் நடவடிக்கைக்கு காங்கிரஸ் கடும் கண்டனம்!

*இம்பால், ஜூன் 30-*

*மணிப்பூரில் கலவரம் பாதித்த பகுதிகளை பார்வையிட சாலை மார்க்கமாக சென்ற ராகுல் காந்தியை காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர். இதனால் இம்பால் விமான நிலையம் திரும்பிய அவர், ஹெலிகாப்டர் மூலம் தனது பயணத்தைத் தொடர்வதாக அறிவித்துள்ளார்.*

*மணிப்பூர் மாநிலத்தில் இடஒதுக்கீடு விவகாரத்தில் இரு சமூகத்தினரிடையே வன்முறை வெடித்தது. 50 நாட்களுக்கும் மேலாக அங்கு வன்முறை நீடித்து வரும் நிலையில், வன்முறையை கட்டுக்குள் கொண்டுவர ஒன்றிய மற்றும் மாநில பா.ஜ.க. அரசுகள் திணறி வருகின்றன. இந்த நிலையில், மணிப்பூரில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி ஆய்வு செய்ய பயணம் மேற்கொண்டுள்ளார்.*

*இம்பால் விமான நிலையம் வந்த அவர், அங்கிருந்து சூரசந்த்பூர் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை சந்திப்பதற்காகச் சென்றபோது, ராகுல் காந்தியின் காரை பிஷ்ணுபூர் அருகே காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர்.*

*சாலை மார்க்கமாகச் சென்றால் ராகுல் காந்தியின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளதாக காவல்துறையினர் விளக்கம் அளித்தனர். காவல்துறையினரின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து விஷ்ணுபூரில் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், தனது குழுவினருடன் இம்பால் விமான நிலையம் திரும்பிய ராகுல் காந்தி, அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் தனது பயணத்தைத் தொடர்வதாக தெரிவித்துள்ளார்.*

---

உத்தரகாண்டில் நிலச்சரிவு:

## சாலை அடித்துச் செல்லப்பட்டதால் சுற்றுலா பயணிகள் அவதி!

*புதுடெல்லி, ஜூன் 30-*

*உத்தரகாண்ட் மாநிலம் சாமோலியில் நேற்று பெய்த கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், முக்கிய நெடுஞ்சாலையின் ஒரு பகுதி அடித்துச் செல்லப்பட்டது. இதனால் வெறியேற முடியாமல் சுற்றுலாப் பயணிகள் தவித்து வருகின்றனர். பத்ரிநாத் செல்லும் தேசிய நெடுஞ்சாலை 7ன் ஒரு பகுதி சாமோலி மாவட்டத்தில் உள்ள சின்கா அருகே சரிந்த மண்ணால் மூடப்பட்டுள்ளது. இதனால், சுற்றுலா பயணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*ஏற்கனவே, அண்டை மாநிலமான இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள மண்டி மற்றும் குலுவை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையில் திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டதால் சுமார் 15 கிலோ மீட்டர் 200 பேர் சிக்கினர். இந்த சம்பவம் நடைபெற்ற மூன்று நாட்களில் சாமோலியில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.*